# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066932

1. District : பெரம்பலூர் மாவட்டம் | PS: ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 02 மு.த.அ. எண் | Date: 25.10.19 நாள்

2. (i) Act சட்டம்: 1. The prevention of corruption Act 1988 - as Amended by the prevention of corruption (Amendment) Act-2018. | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: u/s 7, 7A
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: u/s 102 crpc.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : 2. Criminal Procedure code

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 24.10.19 | Date from : நாள் முதல் 14.15 hr | Date to : நாள் வரை 20.30 hr.
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.10.19 | Time : நேரம் 16.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.10.19. | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியல் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 km வடக்கு.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மாவட்ட மேலாளர் அலுவலகம், TASMAC, பெரம்பலூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஜெ. பாலு | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெரியண்ணன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 57/19 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

* GCP-240-34(Type-2) 90,000 Cps -2T 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு
—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்
—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

புகார் கொடுக்கப்படுகிறது. இன்று 25.10.19. தேதி 16.00 மணியளவில், பெரம்பலூர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது, தப.பாலு, மாவட்ட ஆய்வுக் குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்பவர் ஆஜராகி, கணினியால் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை அளித்தார். அதன் விபரம் பின்வருமாறு அனுப்புநர், திரு. தப.பாலு, வயது 57/19, த/பெ பெரியண்ணன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம். திருச்சிராப்பள்ளி

— cont/-

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு
(signature) 25.10.19

R. Kathiravalli
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.10.19
17.30 hrs.

Name: பெயர் R. கதிரவள்ளி
Rank: நிலை ……………………No. எண் ……….
காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**Continuation of FIR in Perambalur, V&AC, Cr.No 02/2019**

மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, பெரம்பலூர். ந.க.எண். 415/2019/அ1 நாள் 25.10.2019 ஐயா/அம்மையீர், பொருள்: பெரம்பலூர் மாவட்டம் - தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC) - மாவட்ட மேலாளர் அலுவலம் (TASMAC), பெரம்பலூர் - 24.10.2019 அன்று பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது – மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் கொடுத்தல் தொடர்பாக... பார்வை: திடீர் ஆய்வு செயல்முறைகள் நாள்:24.10.2019 பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு பெரம்பலூர் மாவட்ட, தமிழ்நாடு மாநில வாணிப கழக (TASMAC), ஊழியர்கள் தங்கள் அலுவலக பணியை செய்வதற்காக விற்பனையாளர்கள் மற்றும் பார் உரிமையாளர்களிடமிருந்து இடைத்தரகர்கள் மூலமாக கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திலிருந்து காவல் ஆய்வாளர் திருமதி.ரா.ரத்தினவள்ளி மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு பெரம்பலூர், மாவட்ட மேலாளர் அலுவலகம், (TASMAC) சென்று என்னையும் காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு மேற்படி அலுவலகத்தை 24.10.2019-ம் தேதி மதியம் சுமார் 14.15 மணி முதல் இரவு 20.30 மணிவரை திடீர் ஆய்வு செய்ததில் மேற்படி அலுவலக அலுவலர்கள், டாஸ்மாக் கடை மேற்பார்வையாளர்கள் மற்றும் தனிநபர்கள் என அங்கிருந்தவர்களை சோதனை செய்ய அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியாக காரணம் கூற இயலாமல் வைத்திருந்த மொத்த தொகை ரூ.55,090/-யை கைப்பற்றி திடீர் ஆய்வு செயல்முறைகளை பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு மடிக்கணினி மூலம் தயார் செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு மாநில வாணிப கழகம் (TASMAC), மாவட்ட மேலாளர் அலுவலகமானது மேற்கு நோக்கி வாசல் கொண்டதாகவும், அதற்கு மேற்கில் 20 அடி தார் ரோடு வடக்கு தெற்காகவும் உள்ளது. அலுவலகத்திற்கு மேற்கில் ஸ்ரீ பாலாஜி டீ ஸ்டால் கிழக்கு நோக்கி உள்ளது. மாவட்ட மேலாளர் அலுவலகத்திற்கு சுமார் 100 மீட்டர் வடக்கில் வடக்குமாதேவிக்கு செல்லும் 4 ரோடு உள்ளது. மேற்படி அலுவலகத்திற்கு தெற்கில் எளம்பலூர்-கோனேரிபாளையம் ரோடு கிழக்கு மேற்காக உள்ளது. மேற்படி அலுவலகத்தின் முகப்பில் இரும்பு கேட் உள்ளது. அதற்கு கிழக்கில் செக்யூரிட்டி அறையும் அதன் கிழக்கில் லாரிகள் நிறுத்துமிடமும் உள்ளது. அதற்கு தெற்கில் பழைய பதிவேடுகள் அறையும், ஜெனரேட்டர் அறையும் உள்ளது. அலுவலகத்திற்கு வடக்கில் வாகனம் நிறுத்திமிடம் அதற்கு கிழக்கில் அலுவலர்கள் ஓய்வு அறையும், அதற்கு தெற்கில் கழிவறையும் உள்ளது. மேற்படி அலுவகத்தினுள் நுழைந்தவுடன் வலது பக்கமாக மாடிக்கு செல்லும் படிக்கட்டுகளும் அதற்கு கிழக்கில் முறையே மாவட்ட மேலாளர், உதவி மேலாளர் (கணக்கு) அறைகள் உள்ளது. மாவட்ட மேலாளர் அறைக்கு வடக்கில் ஹாலும் அதற்கு வடக்கில் பழைய பதிவேடுகள் அறையும் அதற்கும் வடக்கில், கிழக்காக முறையே ஆண்கள் கழிவறை, உதவி மேலாளர் சில்லறை விற்பனை, உதவி மேலாளர் மொத்த விற்பனை மற்றும் கம்பியூட்டர் அறைகள் உள்ளது. மேற்படி அறைகளுக்கு தெற்கில்

பார் பிரிவு அதற்கு கிழக்கில் BRS. விற்பனை பிரிவுகளும் மேற்கில் கணக்கு பிரிவு முறையே கணக்கு பிரிவு பணியமைப்பு பிரிவுகளும், அதற்கு மேற்கில் தடுப்பினை அடுத்து அலுவலக உதவியாளர்கள் டேபிலும் உள்ளது. உதவி மேலாளர் (கணக்கு) அறைக்கு கிழக்கில் மதுபான கிடங்கு உள்ளது. திடீர் ஆய்வின் போது அலுவலகத்தில் மாவட்ட மேலாளர், திரு.N.ராமசந்திரன், Tasmac அலுவலர்கள் திரு.கோவிந்தராசு, குடோன் உதவியாளர், திருமதி.இந்திராகாந்தி, அலுவலக உதவியாளர், திருமதி,சாந்திராணி, அலுவலக உதவியாளர், திரு.M.கார்த்தி, உதவி மேலாளர்(கணக்கு)(தொகுப்பூதியம் பெறுபவர்) மற்றும் Texco அலுவலர்கள். திரு.மதியழகன், திரு.ரவிச்சந்திரன், திரு.P.முருகவேல், எரையூர் Tasmac மேற்பார்வையாளர், திரு.V.செந்தில் குமார், ஆடிட்டர், திரு.கல்யாணசுந்தரம், இளநிலை உதவியாளர்(தினகூலி கணக்கு பிரிவு), திரு.S.கண்ணதாசன், Tasmac மேற்பார்வையாளர் (குன்னம்), S.இளவரசி, கணினி ஆப்ரேட்டர்(தினக்கூலி), திரு.ஷியாமளா, இளநிலை உதவியாளர்(தினக்கூலி), திரு.அறிவுச்செல்வன், விற்பனையாளர், மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் மதுபான கிடங்கில் 26 லோடு மேன்களும் பாதுகாவலர் திரு.விஜயராஜ்ம் பணியில் இருந்தனர். உணவு இடைவேளைக்கு சென்றிருந்த திரு.N.தமிழரசன், உதவி மேலாளர் (சில்லறை விற்பனை) மற்றும் திரு.சீனிவாசன், கிடங்கு மேலாளர்(மொத்தவிற்பனை) ஆகியோர்கள் அலுவலத்திலிருந்து தகவல் தெரிவித்தும் திடீர் ஆய்வு முடியும் வரை அலுவலகத்திற்கு திரும்பி வரவில்லை. மேலும் தனிநபர்கள் 9 பேர்கள் அலுவலகத்தினுள் இருந்தார்கள். அலுவலகத்தில் இருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது சில நபர்கள் நழுவ முயற்சித்தார்கள். அவர்களை நிறுத்தி அவ்வலுவலகத்திற்குள் அவர்கள் வந்த விபரத்ததை ஆய்வுக்குழு ஆய்வாளர் தனித்தனியாக விசாரித்தபோது சரியான விபரம் எதுவும் சொல்லாதால் அவர்களை தனித்தனியே விசாரிக்க அவர்கள் கீழே கண்டவாறு பணம் வைத்திருந்தது தெரியவந்தது. மேற்படி அலுவலக பணியாளர்கள் வைத்திருந்த பணம் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | பெயர் | பதவி | மொத்த தொகை | திருப்பிதரப்பட்ட தொகை | கைப்பற்றப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.N.ராமசந்திரன் | மாவட்ட மேலாளர் | 3150 | 2000 | 1150 |
| 2. | திரு.M. கார்த்தி | உதவி மேலாளர்(கணக்கு) (தொகுப்பூதியம்) | 250 | 250 | - |
| 3. | திரு. M.கோவிந்தராசு | கிடங்கு உதவியாளர் | 2080 | - | 2080 |
| 4. | திருமதி.R.இந்திராகாந்தி | அலுவல உதவியாளர் | 2600 | 800 | 1800 |
| 5. | திருமதி.சாந்திராணி | அலுவலக உதவியாளர் | 800 | 500 | 300 |
| 6. | திரு.R.மதியழகன் | Texco பணியமைப்பு எழுத்தர் | 1830 | 1830 | - |
| 7. | திரு.D.ரவிச்சந்திரன் | Texco உதவியாளர் | 1140 | 130 | 1010 |
| 8. | திரு.P.முருகவேல் | எரையூர் | 6170 | - | 6170 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Tasmac மேற்பார்வையாளர் | | | |
| 9. | திரு.V.செந்தில் குமார் | ஆடிட்டர் | 470 | 470 | - |
| 10. | திரு.P.கல்யாணசுந்தரம் | இளநிலை உதவியாளர்(தினகூலி) கணக்குபிரிவு | 730 | 730 | - |
| 11. | திரு.S.கண்ணதாசன் | Tasmac மேற்பார்வையாளர் (குன்னம்) | 10,010 | - | 10,010 |
| 12. | S.இளவரசி | கணினி ஆப்ரேட்டர் (தினக்கூலி) | 210 | 210 | - |
| 13. | திருமதி.S.ஷியமளா | இளநிலை உதவியாளர் னக்கூலி | 1855 | 1855 | - |
| 14. | திரு.அறிவுசெல்வம் | விற்பனையாளர், மாவட்ட மேலாளர் அலுவலகம் | 103 | 103 | - |

15. அலுவலக உதவியாளரின் டேபிளின் அருகில் உள்ள ஸ்டீல் பீரோவின் பின்புறம் ரூ.1000 கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க யாரும் உரிமை கோராத காரணத்தால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

அலுவலகத்தினுள் இருந்த 9 தனிநபர்கள் வைத்திருந்த பணத்தின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பெயர் | பதவி | மொத்த தொகை | திருப்பிதரப்பட்ட தொகை | கைப்பற்றப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.K.கோவிந்தராசு | தனிநபர் | 7020 | 7020 | 0 |
| 2. | திரு.V.ராஜகோபால் | மாவட்ட மேலாளரின் ஓட்டுநர் | 6460 | - | 6460 |
| 3. | திரு.S.முருகன் | தனிநபர் | 16300 | 1300 | 15000 |
| 4. | திரு.A.அண்ணாதுரை | தனிநபர்(லாரி ஓட்டுநர்) | 5950 | 5950 | - |
| 5. | திரு.D.காமராஜ் | தனிநபர்(லாரி ஓட்டுநர்) | 3740 | 3740 | - |
| 6. | திரு.S.யுவராஜ் | தனிநபர் | 10110 | - | 10110 |
| 7. | திரு.A.பழனிமுத்து | தனிநபர் | 1930 | 1930 | - |
| 8. | திரு.D.ராஜ்கிரண் | தனிநபர் | 500 | 500 | - |
| 9. | திரு.B.ஸ்ரீதர் | பத்திரிக்கையாளர் | 2490 | 2490 | - |

மேற்படி அலுவலக பணியாளர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகையில் சரியாக காரணம் கூறிய பணம் அவர்களிடமே திருப்பிதரப்பட்டு, சரியான காரணம் கூற இயலாத தொகையை அலுவலக பணியாளர்கள் கையூட்டாக பெற்றிருக்கலாம் என்று கருதி விசாரணைக்காக அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி தனி நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகையை சரியாக காரணம் கூறிய தொகையை அவர்களிடம் திருப்பி தரப்பட்டு சரியான முகாந்திரம் கூறாத தொகையை அலுவலக

பணியாளர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்தாக கருதி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக 2019 ஆண்டிற்கான பணியாளர்களது வருகை பதிவேடு, தினகூலி ஊழியர்களின் வருகை பதிவேடு, நகர்வு பதிவேடு மற்றும் தாமத வருகை பதிவேடு கைப்பற்றப்பட்டது. அலுவக பணியாளர்களது தின பணக் கையிருப்பு பதிவேடு, விடுப்பு பதிவேடு ஆகியவை பராமரிக்க படவில்லை. நகர்வு (Movement) பதிவேடு சரிவர பராமரிக்காமல் ஜுலை 2014 முதல் நவம்பர் 2018 வரை மட்டும் பதிவுகள் உள்ளது. ஜுலை 2019க்கு பிறகு கொடிநாள் வசூல் ஏதும் செய்யப்படவில்லை என மாவட்ட மேலாளர் சான்றளித்துள்ளார். திடீர் சோதனை செயல்முறை 24.10.2019ம் தேதி இரவு சுமார் 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே காரணம் கூற இயலாமல் பணம் வைத்திருந்த மேற்படி நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் நேற்று 24.10.2019ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் கையூட்டாக கருதப்பட்டு கைப்பற்றப்பட்ட பணம் ரூ.55,090/- மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்புவிக்கிறேன். ஆங்கிலத்தில் ஒப்பம் திரு.பெ.பாலு, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். இணைப்பு: 1) திடீர் ஆய்வு செயல்முறைகள் நாள்: 24.10.2019 2) மொத்தப்பணம் ரூ.55,090/- மற்றும் திடீர்ஆய்வு செயல்முறைகளில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள். ஐயா, மேற்படி புகாரை பெற்று நிலைய குற்ற எண் 02/2019 u/s 7, 7(A) the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 CrPC ன் படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார் மனுவையும் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, பெரம்பலூர் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நிலைய கோப்பிலும் வைத்தேன்.

R. Rathinavalli

(ரா.ரத்தினவள்ளி) 25.10.19.

காவல் ஆய்வாளர்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு

பெரம்பலூர்

**முதல் தகவல் அறிக்கையில் Column 7 ல் கண்ட எதிரிகளின் பெயர் பட்டியல்**

1) திரு.N.ராமசந்திரன், மாவட்ட மேலாளர், (TASMAC), பெரம்பலூர்.

2) திரு. M.கோவிந்தராசு, கிடங்கு உதவியாளர், மாவட்ட மேலாளர் அலுவலகம், (TASMAC), பெரம்பலூர்.

3) திருமதி.R.இந்திராகாந்தி, அலுவலக உதவியாளர், மாவட்ட மேலாளர் அலுவலகம், (TASMAC), பெரம்பலூர்.

4) திருமதி.சாந்திராணி, அலுவலக உதவியாளர், மாவட்ட மேலாளர் அலுவலகம், (TASMAC), பெரம்பலூர்.

5) திரு.D.ரவிச்சந்திரன், Texco உதவியாளர், மாவட்ட மேலாளர் அலுவலகம், (TASMAC), பெரம்பலூர்.

6) திரு.P.முருகவேல், Tasmac மேற்பார்வையாளர், எரையூர், பெரம்பலூர் மாவட்டம்

7) திரு.S.கண்ணதாசன், Tasmac மேற்பார்வையாளர், குன்னம், பெரம்பலூர் மாவட்டம்

8) திரு.V.ராஜகோபால், மாவட்ட மேலாளரின் ஓட்டுநர், மாவட்ட மேலாளர் அலுவலகம், (TASMAC), பெரம்பலூர்.

9) திரு.S.முருகன், தனிநபர்

10) திரு.S.யுவராஜ், தனிநபர்

R. Rethinavalli. 25.10.19.

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Perambalur